**C.C. No.256/2019** நாள் : 18/11/2021

அ.சா.13 திரு.வாசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது தொப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.04.2019 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு நான் தருமபுரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது தர்மபுரி அரச மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் தலைமை காவலர் திருமதி.கலையரசி என்பவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சித்ரா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து வந்து எனது பார்வைக்கு வைத்தார். அந்த புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து நான் நிலைய குற்ற எண் 22/2019, இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(ஏ)ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், அசல் புகார் வாக்குமூலத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் வழக்குகோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.பழனிசாமி என்பவரிடம் ஒப்படைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 கொடுத்துள்ள புகார் வாக்குமூலத்தில் வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று கூறியுள்ளார் என்றால் வினோத் என்பவர் ஓட்டியதாக கூறியுள்ளார். புகார் வாக்குமூலத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு பின்னால் மற்றொரு வாகனத்தில் அ.சா.1 யுடன் வேலைக்கு செல்லும் நபர்கள் வந்ததாக கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்படவில்லை.

**மறுவிசாரணை –** இல்லை